திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி இருக்கிறது. அங்கே சுற்றுலா துறை மூலமாகவும், தனியாகவும் பலதரப்பட்ட மக்கள் வந்து செல்கிறார்கள். அங்கே ஒரு மிருகக் காட்சிசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இருந்தும் அங்கே எந்தவிதமான மிருகமும் இல்லை. ஆகவே அதை விரிவுபடுத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இதுபற்றித் தனியாக கேள்வி கேட்டால் பதில் சொல்ல இயலும்.

ஜெயங்கொண்டம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்.

163—(*வினா எண் 9949)—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சூனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர் திரு. ர. சின்னச்சாமி கைது செய்யப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தர்மபுரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிட மிருந்து 23–11–1986–ம் தேதியன்று கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றது:

" I have the honour to inform you that on 23rd November 1986 at 11.35 Hours, Thiru R. Chinnasamy, M.L.A., (D.M.K.) of Dharmapuri Assembly Constituency and 49 others assembled at the Bus Stand, Dharmapuri, as a protest against alleged imposition of Hindi, defying regulatory order under Section 30 (2) Police Act in force. After a brief address, they burnt the 17th Part of the (relevant portion of Official Languages) Constitution of India and caused insult to the honour of